திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கம்
இராஜாங்க அமைச்சு

# இலங்கை ஜெர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகம்

# பதவி வெற்றிடங்கள்

திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கை ஜெர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகத்தின் ஆனமடுவ வலய மத்திய நிலையத்தில் வெற்றிடமாகியுள்ள பின்வரும் பதவிகளுக்காக நிரந்தர அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## 01. விரிவுரையாளர் - (MA2-2) பதவிகள் -05

(மோட்டார் தொழில்நுட்பம், மில்ரயிட், வாகன மின்சாரம், டீசல் பம்பிகள் மற்றம் உருக்கி ஒட்டுதல் போன்ற துறைகளுக்கு மாத்திரம் வெற்றிடங்கள் உண்டு)

**தொழில் -**

அங்கீகரிக்கப்பட்ட நிறுவகமொன்றிலிருந்து மோட்டார் தொழில்நுட்பம்/ மெகாட்ரொனிக்/ மில்ரைட்/ மின்சக்தி/ குளிரூட்டி மற்றும் வளிச்சீராக்கி/ இயந்திரவியல்/ வாகன மின்சாரம்/ டீசல் பம்பி/ உருக்கி ஒட்டுதல்/ மோட்டார் வாகன உடற்பாகங்களைப் புதுப்பித்தல் மற்றும் வர்ணம் தீட்டுதல் போன்ற துறைகளை அல்லது இ.ஜெ. தொ.நு நிறுவகத்தின் ஏனைய துறைகளின் NVQS தரத்திற்குக் குறையாத டிப்ளோமா பாடநெறியொன்றை சித்திகரமாகப் பூரணப்படுத்தி இருத்தல் மற்றும் இ.ஜெ.தொ.நு நிறுவகத்தின் முழுநேர பாடநெறியொன்றைப் பயின்று தரமான சித்தியைப் பெற்று இருத்தல் (தரம் I அல்லது II)

அல்லது

இலங்கை ஜெர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகத்தின் மோட்டார் தொழில்நுட்பம்/ மெகாட்ரொனிக்/ மில்ரையிட்/ மின்வலு/ குளிரூட்டி மற்றும் வளிச்சீராக்கி/ இயந்திரவியல்/ வாகன மின்னியல்/ டீசல் பம்பி/ உருக்கி ஒட்டுதல்/ மோட்டார் வாகன பொடி புதுப்பித்தல் மற்றும் வர்ணம் தீட்டுதல் போன்ற துறைகளில் 04, 03½ அல்லது 03 வருட கால முழு நேரப் பாடநெறியொன்றைப் பயின்று (தரம் I அல்லது II) தரச்சித்தியொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் உரித்தான துறையில் 03 வருடகால அனுபவம் அல்லது அங்கீகாரம் பெற்றுள்ள பயிற்சி நிறுவனமொன்றில் உரித்தான துறையில் கற்பித்தல் தொடர்பாக குறைந்தபட்சம் 03 வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**சம்பள அளவுத்திட்டம் -** MA 2-2-2016 - & 30,310 - 300x10 - 350x07 - 600x04 - 710x20 - 52,360/-
(இதற்கு மேலதிகமாக அரசு அனுமதித்த வாழ்க்கைச் செலவுப்படிகளிற்கும் உரித்துடையவராவர்.)

**தேர்ந்தெடுக்கப்படும் முறை -** போட்டி ரீதியிலான எழுத்துப் பரீட்சையொன்றின் பெறுபேற்றின் அடிப்படையில் மற்றும்/ அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு ஒன்றின் மூலம்

**வயதெல்லை -**
விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களிற்கு உச்ச வயதெல்லை பொருந்த மாட்டாது.

## 02. முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் அல்லாத - (MA 1-2) பதவிகள் -02

**தகைமைகள்:-**
**வெளிவாரி -**

க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் பழைய பாடத்திட்டத்தின் கீழ் நான்கு பாடங்களில் அல்லது புதிய பாடத்திட்டத்தின் கீழ் மூன்று பாடங்களில் சித்தி

மற்றும்

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத முறைகளில் சிங்களம்/ தமிழ் மொழி மற்றும் கணிதம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி அடைந்திருத்தல்

**உள்ளகம் -**

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத முறைகளில் சிங்களம்/ தமிழ் மொழி மற்றும் கணிதம் பாடங்களில் திறமைச்சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்து, தற்பொழுது ஆரம்ப - திறனற்ற (PLI) மற்றும் ஆரம்ப திறனுள்ள (PL3) - சம்பள அளவுத்திட்டத்தின் கீழ் உள்ளவர்கள் இதற்காக விண்ணப்பிக்கலாம்.

**சம்பள அளவுத்திட்டம் -** MA 1-2-2016 - ரூ 27,910 - 300x10 - 350x07 - 600x12 - 710x12 - 49,080/-
(இதற்கு மேலதிகமாக அரசு அனுமதித்த வாழ்க்கைச் செலவுப்படிகளிற்கும் உரித்துடையவராவர்.)

**சேர்த்துக் கொள்ளப்படும் முறை -** கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம்

**வயதெல்லை -**
விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களிற்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

## 03. பாதுகாப்பு பரிசோதகர் - (MA 1-2) பதவிகள் - 01

**தகைமைகள்:-**
**வெளிவாரி -**

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத முறைகளில் சிங்களம்/ தமிழ் மொழி மற்றும் கணிதம் உட்பட (ஆறு) 06 பாடங்களில் சித்தி

மற்றும்

அரச திணைக்களமொன்றில், கூட்டுத்தாபனமொன்றில் சபையொன்றில் அல்லது அங்கீகாரம் பெற்ற வணிக நிறுவனமொன்றில் குறைந்தபட்சம் குறித்த துறையில் ஐந்து (05) வருட அனுபவம் பெற்றிருத்தல்.

**உள்ளகம் -**

க.பொ.த. சாதாரண தரம் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத முறைகளில் சிங்களம்/ தமிழ் மொழி மற்றும் கணிதம் பாடங்களில் திறமைச்சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்து, தற்பொழுது ஆரம்ப - திறனற்ற (PLI) மற்றும் ஆரம்ப திறனுள்ள (PL3) - சம்பள அளவுத்திட்டத்திலுள்ளவர்கள் இதற்காக விண்ணப்பிக்கலாம்.

**சம்பள அளவுத்திட்டம் -** MA 1-2-2016 - ரூ 27,910 - 300x10 - 350x07 - 600x12 - 710x12 - 49,080/-
(இதற்கு மேலதிகமாக அரசு அனுமதித்துள்ள வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுகளிற்கு உரித்துடையவராவர்.)

**தேர்ந்தெடுக்கப்படும் முறை -** போட்டி ரீதியிலான எழுத்துருவ பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் மற்றும்/ அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு ஒன்றின் மூலம்.

**வயதெல்லை -**
விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

## அனைத்துப் பதவிகளுக்குமான பொது நிபந்தனைகள்

- ❖ அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும்.
- ❖ நாட்டின் ஏதேனும் மாகாணமொன்றில் பணியாற்றக்கூடிய உள மற்றும் உடல் ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.
- ❖ மிகவும் சிறந்த நன்நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.
- ❖ மேற்படி பதவிகளிற்காகச் சேர்த்துக்கொள்ளப்படும் வெளிவாரி விண்ணப்பதாரர்கள், 03 வருட தகுதிகாண் காலத்தைப் பூரணப்படுத்தல் வேண்டும். அவன்/ அவள் அக்கால கட்டத்தின் இறுதியில் வெளிப்படுத்தும் திருப்திகரமான செயற்பாடுகள் மற்றும் நிலைப்பாடுகளின் பிரகாரம் பதவியில் நிரந்தரமாக்கப்படுவர். ஏற்கனவே பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள உள்ளக விண்ணப்பதாரர்கள் ஒரு வருட பரீட்சார்த்த காலத்திற்கு உட்படுத்தப்படுவர்.
- ❖ குறித்த பதவிகளிற்கான அடிப்படைச் சம்பளத் திட்டத்திற்கமைவாக மேற்படி பதவிகளிற்கான நியமனங்கள் வழங்கப்படும்.
- ❖ ஊழியர் சேமலாப நிதியத்திற்காக சம்பளத்தின் 08% அறவிடப்படுவதுடன், அதற்காக நிறுவனமானது 12% ஐயும் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3% ஐயும் வழங்கும்.

**விண்ணப்பதாரர்கள் பின்வரும் ஆவணங்களின் நிழற்படப் பிரதிகளை தம் விண்ணப்பப்படிவங்களுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.**

**அ. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்**
**ஆ. கல்வி மற்றும் தொழிற்றகைமைகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்கள்**
**இ. சேவை அனுபவம் தொடர்பான சான்றிதழ்**
**ஈ. தேசிய ஆளடையாள அட்டை**

தற்போது அரச, கூட்டுத்தாபனம், நியதிச் சபை மற்றும் திணைக்களங்களில் பணியாற்றும் நபர்கள் தம் நிறுவனத் தலைவரினூடாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டுமென்பதுடன், விண்ணப்பதாரர் இதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவன்/ அவள் பணியிலிருந்து விடுதலை செய்யப்படலாம் என நிறுவனத்தலைவர் உறுதிப்படுத்துதல் வேண்டும். உறவினரல்லாத உங்களைப் பற்றி விசாரிக்கக்கூடிய இருவர் உட்பட முழுமையான விபரங்களுடன் கூடிய விண்ணப்பமொன்று சுயமாக சான்றுபடுத்திய சான்றிதழ்களின் பிரதிகளுடன், 2021.07.23ஆம் திகதிக்கு முன்னர், முகாமையாளர் நிருவாகம் மற்றும் மனிதவளம், இலங்கை ஜெர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகம், இலக்கம் 582, காலி வீதி, கல்கிஸ்சை என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். தபாலுறைகளின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிடப்படல் வேண்டுமென்பதுடன், தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் மாத்திரம் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள் தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

தேர்ந்தெடுப்பதற்காக எவ்வகையிலாயினும் செல்வாக்குச் செலுத்துவது இதற்கான தகைமையீனம் ஆகும்.

**பணிப்பாளர் - அதிபர்**
**இலங்கை ஜெர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகம்,**
**இலக்கம் 582,**
**காலி வீதி, கல்கிஸ்சை.**